# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2016. 10. 17 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். எம். மரிக்கார் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 26.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்)

## த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

“ த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*த இன்ஸ்டிட்யுட் ஒப் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுண்டன் ஸைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “சங்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “ த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத்

2-PL 004849 - 225 (2016/11)

தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) உலகம் பூராகவுள்ள கணக்கியல், தொழில், நிதி ஆகிய துறைகளில் திறமைவாய்ந்த மக்களுக்கு கோட்பாடு ரீதியாகவும் செயன்முறை ரீதியாகவும் கணக்கியலை முன்னெடுத்துச்செல்ல ஒரு தொழிற்றுறை அமைப்பை ஏற்பாடுசெய்து தொடர்ந்து அதன் அங்கத்தவர்களுக்கு மக்களின் பொதுநலனுக்காக உழைக்க உதவுதல் ;

(ஆ) பொதுநலனுக்காக பிரயோக விஞ்ஞானம், கலைகள், வியாபாரமும் தொழிலும், அரசாங்க பொது சேவைகள் பரிபாலனம், கைத்தொழில் மேலும் வர்த்தகம் ஆகிய வற்றை கணக்கியல் கலைமூலமாக மேம்படுத்தல் ;

(இ) கணக்காளர்களுக்கு வாழ்க்கைபூராவும் அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதுடன் கணக்கியல் செய லாற்றுகையின் தர உயர்வுக்கு உதவி, தனிப்பட்டரீதியில் கணக்காளர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்கள் உயர்வுக்கு வழிவகுத்தல் ;

(ஈ) கணக்கியல் கற்கையினை வளர்ச்சியடையச் செய்யவும் அபிவிருத்தி செய்யவும், கணக்கியலின் முறையான கோட்பாடுகள், திறத்தன்மைமுறை மற்றும் பாவனை என்பவற்றை ஊக்குவித்தலும் ;

(உ) கைத்தொழில், வாணிபம், கல்வி, நிதி, அரச சேவை, தனியார் சேவை மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தொழிலில் ஈடுபடுகையில் கணக்கியல் தொழிலை விருத்திசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ஊ) தொழில்ரீதியான கணக்கியல் தகைமை வரை சான்றுப் படுத்தப்பட்ட பகிரங்க கணக்கியல் நிகழ்ச்சித்திட்ட மொன்றை கொண்டுநடாத்துதல் அத்துடன் அவ் வாறான தகைமையுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(எ) அதிக அளவில் தொழிலுக்கு விரும்பத்தகாத தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகளை கவனத்தில்கொள்ளலும், அவற்றுக்கு சட்டத்தை அமுலாக்கி அல்லது சட்டத்தின் மூலம் மாற்றங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல் அல்லது எதிர்ப்பைத் தெரிவித்தல் ;

(ஏ) சிறந்த கணக்கியல் அறிவு மற்றும் தலைமைத்துவ திறமைவாய்ந்த விடயங்களுடன்கூடிய உறுப்பினர்களை உருவாக்கல் ;

(ஐ) உலகம் முழுவதும் அத்துடன் இலங்கையிலும் தனியார் சேவையில் கைத்தொழில் துறையில் அல்லது அரச சேவையில் ஈடுபட்டுள்ள கணக்காளர்களினால் வழங்கப்படும் தொழில்ரீதியான சேவைகள் அத்துடன் அவை சார்ந்த மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட சகல விடயங்கள் பற்றிய கணக்கீடுகளை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவருதல் ;

(ஒ) உலகில் அபிவிருத்தி மற்றும் புதிய அறிவுடன் முன்னேறிச்செல்வதற்கு ஏற்புடைய நிகழ்வுகள், கருத்துக்கள் மற்றும் எண்ணப்பாங்கை பரந்த அளவில் அறிமுகஞ்செய்தல், உறுப்பினர்களுக்கு சர்வதேச தரத்திற்கு நிகரான தகைமைகளை வழங்குதல் ;

(ஓ) அரசாங்க சேவையில் அல்லது வேறு சேவைகளுக்கு ஏற்புடைய கணக்காளர்களின் தொழில்ரீதியான தனித் துவத்தை பாதுகாத்துப் பேணுதல், அவர்கள் பற்றிய தொழில்ரீதியான மேற்பார்வையில் ஈடுபடுதல்,

பிரயோகித்தல் பற்றிய உயர்மட்ட தொழில்ரீதியான தரத்தைப் பேணிவருதலும் விருத்திசெய்தலும், கணக்காளர் தொழில் நிலைமையை பாதுகாத்தலும் முன்னேற்றத்திற்கு ஏற்புடைய வேறு எல்லாவற்றையும் மேற்கொள்ளலும் ;

(ஔ) உயர் தொழில்நுட்ப மற்றும் கோட்பாடுகளுக்கு அமைய உலகில் கணக்கியல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குச் சமமானவர்கள் என்றவகையில் இலங்கையில் கணக்கியல் தொழிலை விருத்திசெய்தல் ;

(க) புலமைபெற்றோர் மற்றும் மேதாவிகள் மட்டத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு பட்டப்பின்படிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதிகளை வழங்குதல் ;

(ங) சான்றிதழ்பெற்ற அரச கணக்காளர்களாக தகைமை பெறுவதற்கு ஆர்வம் உள்ள ஆட்களின் தொழில், கல்வி நடவடிக்கைகள் மற்றும் பிரயோக பயிற்சிகளைச் செயற்படுத்தல், நிர்வகித்தல், அத்துடன் மாணவர்களால் கற்கக்கூடிய பிரயோக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அங்கீகரித்தல் ;

(ச) கல்வி, பயிற்சி மற்றும் பரீட்சைக்கு ஏற்புடைய நிறுவனத்தின் கருமங்களை கருத்திற்கொண்டு நிறுவனத்தினால் நடத்தப்பட்டுவரும் பாடநெறிகளை நெறிப்படுத்தலும் அங்கீகரித்தலும் ;

(ஞ) அவசியமான தொழிற் தகைமைகளை வழங்குவதற்கு பரீட்சைகளை நடாத்துதலும், நிறுவனத்தில் பரீட்சைகளிலிருந்து விலக்களித்தலை வழங்கும் கணக்கியல் பாடநெறிகளை நடத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழில்ரீதியானதும் கல்விரீதியானதுமான நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படல் ;

(ட) பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு உயர்கல்வி நிறுவனங்களில் கணக்கியல் கல்வியை மேம்படுத்தலும், ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளலும், உதவி வழங்குதலும் ;

(ண) நிறுவனத்தின் உறுப்பாண்மையை பெற்றுக்கொள்கையில் அப்போதைக்குள்ள தகைமைகள் மற்றும் தகைமையீனங்களை நெறிப்படுத்தலும் நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு ஏற்புடைய தொழில்சார் நடத்தை மற்றும் கோட்பாடுகள் பற்றிய தரங்களை நிர்ணயித்தல்;

(த) உறுப்பினரின் நன்மை கருதி தொடர்ச்சியான தொழிற் கல்வி வசதிகளை ஒழுங்குசெய்தலும், மேற்பார்வை செய்தலும், நிர்வகித்தலும் ;

(ந) கணக்கியல்துறை நடவடிக்கைகளில் அக்கறைகாட்டும் உறுப்பினர்களின், மாணவர்களின் மற்றும் வேறு ஆட்களினதும் பாவனைக்காக கணக்கியல் மற்றும் அதற்கு ஏற்புடைய விடயங்கள் பற்றி அச்சிடப்பட்டதும் இலத்திரனியல் ஊடக புத்தகங்கள், பருவ ஏடுகள் அடங்கிய நூலகமொன்றைப் பேணுதல் ;

(ப) அரச கணக்கியல் துறையில் தமது திறமைகளைக் காட்டும் ஆட்களுக்கு புலமைப்பரிசில், விருதுகள் மற்றும் பரிசுகளை வழங்குதல் ;

(ம) நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கும் நிறுவகத்தினால் விதப்புரை செய்யப்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்துள்ள ஆட்களுக்கும் டிப்ளோமா மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் ;

(ய) கணக்கியல் அபிவிருத்தியின் கேந்திரஸ்தானமும் தொழில் நடவடிக்கைகளின் முன்னோடியும் ஆதல் ;

(ர) தலைமைத்துவம் மற்றும் சிறந்த முகாமைத்துவம் என்பவற்றில் ஈடுபடுத்துவதன்மூலம் பொருளாதார மற்றும் சமூக நிலையை முன்னேற்றும் குறிக்கோளாகக் கொண்ட எமது அர்ப்பணிப்புகளின் பங்காளரான சகல அமைப்புகளுடன் ஏற்படுத்திக்கொள்ளும் இணைந்த செயற்பாடுகளை விருத்திசெய்தல் ;

(ல) பாரிய பல்லின கம்பெனிகள் முதல் மத்திய அளவிலான தொழில்முயற்சிகள் வரை ஆயினும்சரி பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்

முதல் தொழில்ரீதியான கம்பெனிகள் மற்றும் இலாபத்தை எதிர்பாராத அமைப்புகள் வரையுள்ள நிறுவனங்களையும் உள்ளடக்கிய கைத்தொழில் துறையின் சகல பிரிவுகளுக்கும் ஆகக்கூடிய பயனைப் பெற்றுத்தருவதில் வெற்றிகண்ட கணக்காளர்களை இனங்கண்டு அவர்களுக்கு பயிற்சி வழங்குதல் ;

(வ) பயனுள்ள முகாமைத்துவத்தின் போது பயன் தரும் வகையில் கணக்கீட்டு கல்வியின் முக்கியத்துவம் பற்றிய அக்கறையை உணர்த்துதல் ;

(ழ) சம்மேளனங்கள், கூட்டங்கள், விரிவுரைகள், மாநாடுகள் மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற பல வழிகளில் தொடர்பாடல்களை மேற்கொள்ளுவதற்கும், சந்திப்பதற்கும் தகவல் தொடர்புளை ஏற்படுத்துவதற்கும் உறுப்பாண்மை வகிக்கும் அல்லது வகிக்காத கணக்காளர்கள், அமைப்புக்களின் பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு வாய்ப்புக்களை வழங்குதல் ;

(ள) மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் சம்மேளனங்கள் உள்ளிட்ட வேறு நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல் அத்துடன் படித்த பாடங்களை வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தல்;

(ற) கணக்காளர்களின் வியாபார மற்றும் நடைமுறைப்படுத்தும் சூழலுக்கு தாக்கமேற்படுத்தும் வகையிலான ஒழுங்குறுத்தல் அல்லது வேறுவகையில் விடயங்கள் சம்பந்தமாக கணக்கியல் தொழிலின் பொருட்டு பேச்சாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ன) நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கு முற்றுமுழுதாக அல்லது பகுதியாக அல்லது சமமான நோக்கங்களைக் கொண்டதும் இலங்கையில் அல்லது உலகின் வேறெந்தவொரு இடத்திலும் தாபிக்கப்பட்டுள்ளதும், எந்தவொரு ஆளும், சங்கங்கள், நிறுவனங்கள், ஒழுங்கமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தல், அவர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவர்களுடன் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சர்வதேச ரீதியாக இலங்கையில் கணக்கியல் தொழிலை பிரதிநிதித்துவப்படுத்தல் ;

(அஅ) கருத்துக்கள் மற்றும் அனுபவங்களை பரிமாறிக்கொள்வதன்மூலம் கணக்கியல் துறையில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தலும் அத்தகைய பகுதிகளுக்கு ஏற்புடைய துறைகளுக்கான சட்ட ஆக்கப்பிரிவுகள் பற்றிய கவனத்தை ஈர்த்தலும் ;

(ஆஆ) கணக்கியல் விடயம் போன்று அது சம்பந்தப்பட்ட பிணக்குகள் பற்றிய கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்ளும் வசதிகளை ஏற்படுத்தலும் அவை பற்றிய மிகச் சிறந்த அறிவை விருத்திசெய்தலும் ;

(இஇ) ஒவ்வொரு கம்பெனிகளாலும் தயாரிக்கப் பட்ட பயிற்சித்திட்டங்களை வழங்குதலும் தனியாள் கணக்காளர்களுக்காக பயிலுதல் மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளை வழங்குதலும் ;

(ஈஈ) நிறுவகத்தின் குறிக்கோள்களை மேலும் வெற்றிகரமாக மேற்கொள்வதன்பொருட்டு இலக்கியம், சிறுநூல்கள் மற்றும் வேறு தொடர்பாடல் மாதிரிகளை அச்சிட்டு வெளியிடுதல் அத்துடன் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ;

(உஉ) ஆராய்ச்சிகளை நடத்துதல் அல்லது ஆராய்ச்சிகள் நடத்துதலை மேம்படுத்துதலும், அத்தகைய ஆராய்ச்சிகளின் பயனுள்ள பிரதிபலன்களை வெளியிடுதலும் கற்கை, ஆராய்ச்சி மற்றும் கல்வி வசதிகளை வழங்குதலும் ;

(ஊஊ) திரைப்படங்கள், நாடாக்களில் பதிவு செய்தல் மற்றும் ஏதேனும் வகையிலான எழுத்திலான அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் தொடர்பாடல் நூல்களை அச்சிட்டு வெளியிடல், தயாரித்தல் மற்றும் விநியோகித்தல் அத்துடன் அச்சிட்டு வெளியிடல், தயாரிப்பு மற்றும் விநியோகிக்கும் கருமங்களுக்கு உதவி வழங்குவதன்மூலம் குறிக்கோள்களை வெற்றிகொள்வதற்கு உகந்த எந்தவொரு வகையிலும் பிரசாரம் செய்தல் ;

(எஎ) நூல்நிலையங்களை தாபித்து கொண்டு நடாத்துதலும், பொதுமக்களுக்கு அவற்றை திறந்துவைத்தலும் ;

(ஏஏ) கணக்கீட்டு ஆராய்ச்சிகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளின்போது தலைமைத்துவம் வழங்குதல் ;

(ஐஐ) பொதுமக்கள், சேவை வழங்குநர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நன்மைபயக்கும் வகையில் உயர்தொழில் மட்டத்தில் பெறுமதிமிக்க சேவைகளை வழங்குவதற்கு ஏற்புடைய தரப்பினருக்கு இயலுமானவாறு உறுப்பினர்களுக்கு வளங்கள், தகவல்கள் மற்றும் தலைமைத்துவத்தை வழங்குதல் ;

(ஒஒ) சான்றுபடுத்தப்பட்ட பகிரங்க கணக்காளர்களின் மேன்நிலை, எண்ணப்பாங்கு, செயற்றிறன் மற்றும் தொழில்மட்டம் பற்றி பொதுமக்களை அறிவூட்டல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட பகிரங்க கணக்காளர்களின் (CPA) அவசியப்பாடுகள் மற்றும் நோக்கங்களை ஆராய்தல் ;

(ஓஓ) உயர்மட்டத்தில் தகைமைகளைப் பெற்ற ஆட்கள் சான்றுபடுத்துப்பட்ட பகிரங்க கணக்காளர்களின் (CPA) நிலைக்கு உருவாக்க ஊக்குவித்தலும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தலும் ;

(ஔஔ) தொழில்ரீதியான தரங்களை நிலை நாட்டல், தமது தொழில் நடத்தை, செயற் றிறன் மற்றும் திறமைகளை தொடர்ச்சியாக முன்னேற்றுவதற்கு உறுப்பினர்களுக்கு உதவுதலும் வளர்ச்சித்தரங்கள் மற்றும் தேவைகளை செல்லுபடியாக்கும் வகையில் அத்தகைய செயற்சாதனைகளை மேம்படுத்தல் ;

(கக) நிதி நிலைமைகளை அறிக்கையிடுகையில் உயர்தரத்தைப் பேணுவதற்கு அர்த்தமுள்ள உத்தரவாதத்தை உருவாக்கல் ;

(ஙங) கணக்காய்வாளர்களின் தொழில் மட்டத்தை உயர்நிலைப்படுத்துவதன்மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதி செய்துகொள்ளல் ;

(சச) நிறுவகம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு செவிசாய்ப்பதற்காக வியாபார அறிக்கையிடல், செயற்பாடுகளுக்கு நிலையான வளர்ச்சிகளை பொறுப்பேற்றல் மற்றும் பூரணமானதும், அறிந்துகொள்ள இயலுமானதும், முதலீட்டாளர்களுக்கு பொறுப்புவாய்ந்த விளைவுகளை ஈட்டும் வியாபார அறிக்கையிடல்முறை ஒன்றை நாடுதல் வேண்டும் ;

(ஞஞ) கணக்கியற் தொழில் மற்றும் கல்வியில் பிரவேசிப்பதற்கான தரக்கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கு உதவுதல் மற்றும் இலங்கையிலும் வேறு நாடுகளிலும் தொழில்ரீதியான கணக்காளர்கிடையே பரஸ்பர தொடர்புகளை ஊக்குவித்தல் ;

(டட) கணக்கியல் கல்வி நடவடிக்கைகள், பயிற்சிகள் மற்றும் அனுபவங்கள் பற்றிய இணக்கப்பாடுகளை உறுதிசெய்துகொண்டு, பரீட்சைகள் ஏனைய பரிசோதனைகளை நடாத்துதலும் சான்றிதழ்கள், டிப்ளோமா மற்றும் பட்டங்களை வழங்குதலும் ;

(ணண) டிப்ளோமா, மாணவநிலை பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு மட்டங்களில் கணக்கியல் மற்றும் அதனைச் சார்ந்த வேறு கற்கைத் துறைகளுக்கான தகைமைகளுக்கு வழிகோலும் பாடநெறிகளை நடத்தும் நோக்கத்திற்காக முக்கியமாக பொதுநலவாய அமைப்பின் பல்கலைக் கழகங்கள், வட அமெரிக்க பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவகங்களின் இணைந்த நிறுவனங்களான பலதரப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்க முன்னிற்றல் ;

(தத) நிறுவகரீதியான பயிற்சி வசதிகள் சகிதம் சுயபயிற்சி அமைப்புகளுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிறுவனரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதலும் தகைமைகளை மதிப்பீடுசெய்தலும் ;

(நந) பகிரங்க பயிற்சி மற்றும் கல்வி நிலையங்களை தாபித்து பராமரித்தல் ;

(பப) கணக்கியல் கல்வியை வலுப்படுத்தலும், பங்களிப்பு சேவை வழங்கல்களை விருத்தி செய்தல் மற்றும் ஊக்கமளித்தல், நிறுவகத்தின் உறுப்பினர்கள் அல்லது பொது மக்களுக்காக சுயமாக அல்லது வேறு ஆட்களுடன் விரிவுரைகள், பாடநெறி மற்றும் வகுப்புகளை தாபித்து நடைமுறைப் படுத்தல் அத்துடன் பரிசுகள் அல்லது

வேறு கொடைகள் அல்லது விருதுகள் வழங்குதல் மற்றும் உறுப்பினர்களிடையே தொழில்ரீதியான மற்றும் ஏனைய தகவல்களை விளம்பரம் செய்தல், நூல்நிலையங்களை அமைத்து மற்றும் வெளியீடுகளைத் தயாரித்து அவற்றுக்கு பங்களிப்பு வழங்கி வலுவடையச் செய்தல், உறுப்பினர்களின் பாவனைக்காக மாதிரி படிவங்கள் அல்லது முன்னுதாரணங் களை வழங்குதல் ;

(மம) கணக்கீடு மற்றும் முகாமைத்துவ அறிவை விஸ்தரிப்பதற்கான செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் சம்மேளனங்களை ஒழுங்குசெய்தல் ;

(யய) நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிரயோக கண்காணிப்பு வேலைத்திட்டங் களின்பொருட்டு உறுப்பினர்களைச் சேர்த் துக்கொள்வதை உறுதிப்படுத்தல் ;

(ரர) நிறுவகத்தை பதிவுசெய்தல், கூட்டிணைத்தல் அல்லது வேறுவிதத்தில் வலுப்படுத்து வதற்கு அல்லது பிரதிநித்துவப்படுத்து வதற்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்தல், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு வெளியேயுள்ள நாடுகளில் தாபித்தல் அல்லது இணைப்பு அலுவலகங் களை ஆரம்பித்தல் ;

(லல) ஏற்புடைய ஏனைய அமைப்புகளுடன் இணைப்பு அல்லது தொடர்புகளை மேற் கொள்ளல் மற்றும் நிறுவகத்தின் நோக்கு மற்றும் குறிக்கோள்களை எய்துவதற்கு இலங்கையில் அல்லது ஆட்களுடன் அல் லது அமைப்புகளுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்தல் ;

(வவ) உலகின் எந்த ஒரு இடத்திலும் நிறுவகத்தின் உப அலுவலகங்களை தாபித்தலும் அவற்றை நிர்வகித்தலும் அத்துடன் மூடுதலும் ;

(ழழ) நிறுவகத்தின் நன்மைகருதி தொண்டுச் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் வலுப்படுத்தலும் ;

(ளள) நிறுவகத்தின் தியாக சிந்தனையுடனான குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடைய நிறுவனம் அல்லது நிறுவனங்களை அமைத்து ஒத்துழைப்பு வழங்குதல் அல்லது அவற்றை அமைப்பதில் அல்லது அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நடவடிக்கைகளுக்கு உதவுதல் அல்லது அவற்றின் உறுப்பினராதல் மற்றும் நிறுவகத்தின் குறிக்கோள்களை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் தியாக சிந்தனை நடவடிக்கைகளுக்கு பண உதவிசெய்தல் அல்லது பணம் கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்தல் ;

(றற) எந்தவொரு கட்டடம், விரிவுரை மண்டபம், நூல்நிலையம் அல்லது அலுவலகத்தை சுவீகரித்தல், நிர்மாண வேலைகளை மேற்கொள்ளல், மாற்றங்களைச் செய்தல், அவசியமான பொருட்களை வழங்குதல், பேணுதல் முகாமைத்துவம் செய்தல், நிறுவகத்தின் நடவடிக்கைகளுக்கு எந்தவொரு காணியையும் சுவீகரித்தல் அல்லது கையுதிர்த்தல் மற்றும் நிறுவகத்தினால் உரிமைகோரும் அல்லது உபயோகிக்கப்படும் எந்தவொரு கட்டடத்திற்கு எதிராக எழக்கூடிய அனர்த்தத்தின் பொருட்டு அவற்றை காப்புறுதிசெய்தல் ;

(னன) நிறுவகத்தின் நடடிவடிக்கைகளுக்கு அவசியமானவற்றை இறக்குமதிசெய்தல் மற்றும் நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதன்பொருட்டு உபகரணங்களுக்கான நிதி மற்றும் வேறு உதவிகளை வழங்கல் ;

(அஅஅ) அசைவுள்ள, அசைவற்ற அத்துடன் எந்தவகையிலுமான ஆதனங்களை (வாணிப, கைத்தொழில் மற்றும் வங்கி வியாபார பங்குகள்) பெற்றுக்கொள்ளல், கொள்வனை செய்தல், குத்தகைக்கு எடுத்தல், உரிமம் வழங்குதல், வாடகைக்கு விடுதல், விற்பனை செய்தல் அல்லது சுவீகரித்தல் மற்றும் உறுதிமூலம் இறுதி விருப்பாவண பத்திரத்தால் உரித்தாகும் ஆதனங்களை பொறுப்பேற்றல் ;

(ஆஆஆ) நிறுவகத்துடன் ஒன்றிணைந்து அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு ஆள் அல்லது நிறுவனம் அல்லது உரித்தாகவுள்ள ஆதன சொத்துகள், பொறுப்புக்கள் மற்றும் உடன்படிக்கை செய்துகொண்ட கருமங்கள் முழுவதையும் அல்லது அவற்றின் பாகமாகவோ கொள்வனை செய்தல் அல்லது வேறுவகையில் பொறுப்பேற்று கொண்டுநடாத்துதல் ;

(இஇஇ) நிறுவகத்துடன் ஒன்றிணைவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு, நிறுவகத்திற்குச் சொந்தமான ஆதனங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உடன்படிக்கை செய்துகொண்ட கருமங்கள் முழுவதையும் அல்லது அவற்றின் பாகம் என்றவாறு கையளித்தல் ;

(ஈஈஈ) சட்டத்திற்கு அமைய நிறைவேற்றப்பட வேண்டிய ஏதேனும் விருப்பத்தின்கீழ் நிறுவகத்துக்குச் சொந்தமான ஆதனங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் பாகத்தை விற்றல், வாடகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(உஉஉ) அனைத்து ஆதனங்கள் மற்றும் சொத்துக்களையும் சுவீகரித்து பொறுப்பேற்றல் நிறுவகத்தின் பொறுப்பு ஆவதுடன், கூட்டிணைக்கப்படமுன்னர் இருந்த (த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ்) நிறுவகத்தின் பொறுப்புக் களையும் கடப்பாடுகளையும் ஏற்று தீர்த்து வைத்தலும், அவற்றின்மூலம் செய்ய வேண்டிய மற்றும் அவற்றுக்கு இடைநேர் விளைவான சகலவற்றையும் செய்தல் ;

(ஊஊஊ) இலங்கையில் அல்லது வேறு எந்தவொரு நாட்டிலும் உள்ள நன்கொடையாளர்களிட மிருந்து கொடை, நன்கொடை, அளிப்பு, அன்பளிப்பு, மானியம், உதவித்தொகை மற்றும் சந்தாப்பணம் என்பவற்றைக் காசாகவோ பொருட்களாகவோ பெற்றுக் கொள்ளல் அல்லது சேகரித்தல் ;

(எஎஎ) பொதுவே (பாராளுமன்றத்திற்கு சட்ட மூலத்தைச் சமர்ப்பித்தல் சட்டமூலத்தின் மேம்பாடு உள்ளடங்கலாக) நிறுவகத்தின் கருத்துக்கள் மற்றும் குறிக்கோள்களின் முன்னேற்றம் கருதி அவசியமெனக் கருதப் படும் அத்துடன் அவற்றுக்கிடைநேர்விளை வான வேறு சட்டமுறையானவற்றை காலத்திற்குக்காலம் மேற்கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணிகள் அல்லது கட்டடங்களைச் சுவீகரிப்பதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும், நிர்மாணிப்பதற்கும் அத்துடன் வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான ஏதேனும் முறையில் கொள்ளவும், வைத்திருக்கவும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும் அல்லது கொடுக்கவும் விற்பனை செய்யவும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும் ;

(இ) நிறுவகத்தின் கருமங்களுக்காக அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் (உள்நாட்டு, வெளிநாட்டு) என்பவற்றிலிருந்து பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கடன்களைப் பெறவும், பணத்தைத் திரட்டவும் மற்றும் உதவிகளைப் பெறவும் ;

(ஈ) செலாவணிப்பத்திரங்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் ஏனைய கைமாற்றக்கூடிய சாசனங்களை ஆக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்பிடவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் மற்றும் வழங்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும் மற்றும் முடிவுறுத்தவும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை பணிப்பாளர் சபை பொருத்தமானதெனக் கருதும் வகையில் முதலீடு செய்வதற்கும் ;

(ஊ) நிறுவகத்திற்கு அளிக்கப்பட்ட சேவைகளுக்காக கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகளைக் கொடுப்பனவு செய்தல் ;

(எ) எவரேனும் ஆளுடன், கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகள் அல்லது உடன்படிக்கை களைச் செய்து கொள்ளவும் ;

(ஏ) நிறுவகம் விரும்பியாங்கு அலுவலர்களையும் சேவை யாளர்களையும் நியமனஞ் செய்யவும், வேலையில் ஈடுபடுத்தவும், பதவி நீக்கஞ் செய்யவும் அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக ஆட்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் ;

(ஒ) ஊழியர்களின்பொருட்டு செயற்சாதனை தரக்கட்டுப் பாடுகளைத் தயாரித்தல், அத்தகைய செயற்சாதனை களை மதிப்பீடு செய்தலும் அதன் பேரில் சாதாரண நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(ஓ) ஊழியர்களின் பொருட்டு நலனோம்பு, பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத் தல் ;

(ஔ) பணியாட்டொகுதியினரின் சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல் ;

(க) அத்தகைய பணியாட்டொகுதியின் சேவைகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானித்தல் ;

(ங) பணியாட்டொகுதியின் நன்மை கருதி ஊழியர் சேமலாப நிதியம் ஒன்றைத் தாபித்து ஒழுங்குமுறைப்படுத்தி அத்தகைய நிதியத்திற்கு அல்லது பிரேரணைக்கு பங்களிப்புச் செய்ய வைத்தல் ;

(ச) நியமனம், பயிற்சி, பதவி உயர்வு, ஊதியம், ஒழுக்காற்று கட்டுப்பாடு, நடத்தை மற்றும் விடுமுறை வழங்கல் உள்ளிட்ட தமது உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஏற்புடைய விதிகளை ஆக்குதல் ;

(ஞ) முகாமைத்துவம், பயிற்சி மற்றும் கல்வி நிலையங்களை நிறுவிக் கொண்டுநடாத்துதல் ;

(ட) முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய சகல பிரிவுகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அவற்றுக்கு உதவுதல், இணைப்பு மற்றும் ஊக்குவித்தல் ;

(ண) நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் சேவைக்கான கட்டணங்களை அறிவிடல் ;

(த) நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு கணக்கீடு பற்றிய வழிகாட்டல்கள் மற்றும் தரக்கட்டுப்பாடுகளை விநியோகித்தல் ;

(ந) நிறுவகத்தின் புலமைச் சொத்துக்களின் உரிமைகளைப் பேணுதல் ;

(ப) (i) நிறுவகத்தின் முகாமைத்துவம் மற்றும் அதன் குறிக்கோள்களை ஈடேற்றுவதற்கும் இச்சட்டத்தினதும் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாத விதிகளை ஆக்குதல் ;

(ii) அவ்வாறு ஆக்கப்பட்ட விதிகளை இதன் ஏற்பாடுகளுக்கமைய மாற்றவும், ஏதாவது சேர்த்துக் கொள்ளவும், திருத்தஞ் செய்யவும் அல்லது நீக்கிவிடவும் முடியும் ;

(ம) நிறுவகத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுள்ளதாகவும் நடைமுறைப்படுத்தவும் அவசியமான அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வேறு எல்லாவற்றையும் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. *(1)* கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்குள்ள விதிகளுக்கு அமைய (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவோரைக் கொண்ட பேரவையொன்றினால் நிர்வகிக்கப்படல் வேண்டும்.

பேரவையானது -

(அ) நிறுவகத்தின் உறுப்பினர்களால் அதன் உறுப்பாண்மையிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட தலைவர் மற்றும் துணைத்தலைவர் ;

(ஆ) பின்வருவோர் பதவிவழி உறுப்பினர்களாவர் :-

(i) இலங்கை வாணிபச் சங்கத்தின் தவிசாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் ;

(ii) இலங்கை பல்கலைக்கழகங்களின் கணக்கியல் மற்றும் நிதி பீடங்களின் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் ;

(iii) கம்பெனிகள் பதிவாளர் நாயகம் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் ;

இலங்கை உண்ணாட்டரசிறை ஆணையாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்.

(இ) நிறுவக உறுப்பினர்களால் அதன் உறுப்பாண்மையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இரு உறுப்பினர்கள்.

(ஈ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு உடன் முன்னரான நாளன்று கூட்டிணைக்கப்பட முன்னர் இருந்த " த இன்ஸ்ரிரியூட் ஒப் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுண்டன்ஸ்" நிறுவகத்தில் பதவிவகிக்கும் ஆரம்ப பணிப்பாளர் சபையில் பதவிவகித்த மூன்று உறுப்பினர்கள். இவ்வுறுப்பினர்கள் பின்னர் ஆரம்பப் பணியாளர் சபையின் உறுப்பினர்களால் இரண்டு வருடங்களுக்கு இவ்வுறுப்பினர்கள் பெயர்குறிக்கப்படுவதுடன் ஆரம்பப் பணிப்பாளர் சபையின் ஆயுட்காலத்தில் எத்தனை தடவையும் மீள நியமிக்கப்படலாம்.

(உ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு உடன் முன்னரான நாளன்று கூட்டிணைக்கப்பட முன்னர் இருந்த "த இன்ஸ்ரிரியூட் ஒப் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுண்டன்ஸ்" நிறுவகத்தின் மதியுரைச் சபையில் பதவி வகித்த இரு உறுப்பினர், முன்னர் இருந்த மதியுரைச் சபையின் உறுப்பினர்களால் இவ்வுறுப்பினர்கள் இரு வருடங்களுக்கு பெயர் குறிப்பிடப்படலாமென்பதுடன், மதியுரைச் சபையின் உறுப்பினர்களின் ஆயுட் காலத்தில் எத்தனை தடவையும் மீள நியமிக்கப்படலாம்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு உடன் முன்னரான நாளன்று பதவி வகிக்கும் "த இன்ஸ்ரிரியூட் ஒப் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுண்டன்ஸ் நிறுவகத்தின் மதியுரைச் சபையில் பதவி வகித்த உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர் சபையில் பதவி வகித்த ஐந்து பணிப்பாளர்கள் இவ்வாறு கூட்டிணைக்கப்படும் நிறுவகத்தின் முதல் பேரவையின் உறுப்பினர்கள் ஆதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் ஐந்து வருட காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உபபிரிவின் (அ) மற்றும் (இ) பந்திகளின் பிரகாரம் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு வாக்கெடுப்பு பேரவையின் விதிகளுக்கமைய தேர்தல் நடத்தப்படல் வேண்டும்.

**6**. (1) பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி விடயத்திற்கேற்ப அவரது நியமனம் அல்லது தேர்தல் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டதொரு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் :

பேரவை உறுப்பினர்களின் பதவிக்காலம்.

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் உட்பிரிவு (2) இன் கீழ் நியமிக்கப்பட்டு அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட திகதி யிலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின் முடிவில் பதவியிலிருக்கும் உறுப்பினர்கள் பதவியை வறிதாக்குதல் வேண்டும். ஆனால் மீளத் தேர்ந்தெடுக்கப்படு வதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவை உறுப்பினர் ஒருவர் பதவி துறப்பதன் மூலம் அல்லது அவர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிவாராயின் (5) ஆம் பிரிவின் உபபிரிவு (1) (அ) மற்றும் (இ) பந்திகளுக்கு ஏற்பவும் அவர் நிறுவகத்தின் பதவியை வறிதாக்கல் வேண்டும்.

(3) பேரவை உறுப்பினர் ஒருவர் இறக்கும் பட்சத்தில் அல்லது பதவியை வறிதாக்கும் பட்சத்தில் அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு வேறோர் ஆள், 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினரின் முடிவுறாது எஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) காலம் கழிவதன் மூலம் பதவியை வறிதாக்கும் பேரவையின் உறுப்பினர் எவரும் உறுப்பினர் ஒருவராக மீள் நியமனத்திற்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(5) பேரவையின் உறுப்பினர் ஒருவர் பேரவையால் மன்னிக்கப்பட்டால் அல்லது அத்தகைய உறுப்பினர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்தாலன்றி தொடர்ச்சியாக நான்கு கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறுவதன் மூலம் அத்துடன் (5) ஆம் பிரிவின் உபபிரிவு (1) (அ) மற்றும் (இ) பந்தி களுக்கு அமைய பதவியை வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் நியமனம்.*

**7.** (அ) பேரவை நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாமென்பதுடன் அதன் அலுவல்களை பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் நிர்வகிப்பார். பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பேரவையின் உறுப்பினர் ஆவார்.

(ஆ) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு பொறுப்பிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

(இ) பேரவை, உபபிரிவு (அ) இன் கீழ் நியமிக்கப்பட்ட பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை பதவி யிலிருந்து அகற்றலாம்.

(ஈ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனத்தை பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்குச் செலுத்தப்படலாம்.

*நியமனங்கள் தொடர்பில் பேரவையின் தத்துவங்களை பிரதான நிறைவேற்று உத்தி யோகத்தருக்கு கையளித்தல்.*

**8.** (அ) பேரவையானது நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அலுவலர்களின் அல்லது சேவையாளரின் நியமனங்கள் தொடர்பில் அதன் தத்துவங்கள் எவற்றையும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு கையளிக்கலாம். பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் அவரால் நியமிக்கப்பட்ட தொழில்சார்ந்த பணியாட்டொகுதி உறுப்பினரெவரினதும் வேதனம் உள்ளிட்ட தொழில் நிபந்தனைகள் பேரவையின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை அல்லது வேறு எவரேனும் அலுவலரை அல்லது தொழில்சார்ந்த பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினரை பதவி விலக்குதலானது பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி பயனுறுதலாகாது.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**9.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தினதும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு வகுப்புக்களுக்குமான உறுப்பினர்களால் செலுத்தப்பட வேண்டிய உறுப்பாண்மைக் கட்டணங்களைத் தீர்

மானித்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல், உறுப்பாண்மைக் கட்டணம் செலுத்தாமையால் நீக்குதல் அல்லது அவர்களைப் பதவிநீக்கஞ் செய்தல் ;

(ஆ) நிறுவகத்தின் பதவிதாங்குநர்கள் முகவர்கள் மற்றும் ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களை வேலையில் ஈடுபடுத்தல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை, ஊதியக் கொடுப்பனவு, சேமலாபநிதி மற்றும் அவர்களின் பயன்கருதி வேறு திட்டங்களை ஏற்படுத்தல் என்பன ;

(இ) மாணவர் பதிவுக் கட்டணங்கள், ஆண்டு உதவு தொகைகள், பரீட்சைக் கட்டணங்கள், விரிவுரைக் கட்டணங்கள், கல்விப் புத்தகங்களின் விலைகள் மற்றும் வேறு வெளியீடுகளின் விலைகளை நிர்ணயித்தல் ;

(ஈ) விசேடமான விடயங்களைக் கையாள்வதற்கு நிறுவகத்தின் உறுப்பினர்களைக் கொண்டமைந்த பேரவையின் குழுக்கள் மற்றும் உப குழுக்களை நியமித்தலும் அத்தகைய குழுக்களின் பணிகளை ஒழுங்குபடுத்துதலும் ;

(உ) நிறுவகத்தினுடைய ஆதனத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் ;

(ஊ) பேரவையினதும் நிறுவகத்தினதும் ஆண்டுப் பொதுக் கூட்டங்களையும், அதிவிசேட கூட்டங்களையும் கூட்டுதலும் நடாத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலிலும் அவற்றில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், அவற்றின் நிகழ்ச்சிநிரல்கள் அதற்கான கூட்டநடப்பெண் மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதல் ;

(எ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஏ) ஒழுக்காற்றுக் குழுக்களை ஏற்படுத்துதலும் ஒழுக்க நெறிக் கோவையை வகுத்துத் தொகுத்தலும், உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ஒழுக்காற்று நடைமுறையும் அத்துடன் உறுப்பினர்களைப் பதவிவிலக்கலும் உறுப்பாண் மையை இடைநிறுத்தலும் ; அத்துடன்

(ஐ) சான்றுபடுத்தப்பட்ட பகிரங்க கணக்கியல் (CPA) நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பதற் கான பிரவேச மூலப்பிரமாணம்.

(2) அப்போதைக்கு வலுவிலுள்ள சங்கத்தினால் ஆக்கப்படட ஏதேனும் விதியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவது போன்ற அதேபோன்ற கூட்டத்திலும் மற்றும் அதே போன்ற முறையிலும் திருத்தவும், மாற்றவும் அல்லது அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கஞ் செய்யவும் படலாம்.

(3) நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

பேரவையின் கூட்டங்கள்.

**10.** (1) பேரவையின் கூட்டங்கள் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படல் வேண்டும்.

(2) பேரவையின் ஒவ்வொரு கூட்டம் பற்றிய அறிவித்தலும் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய அறிவித்தல் அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவல்களைக் குறித்துரைத்தலும் வேண்டும்.

(3) விசேட கூட்டமொன்றைக் கூட்டுமாறு பேரவையின் ஐந்து உறுப்பினர்களால் எழுத்து மூலம் கோரப்பட்டு ஏழு நாட்களுக் குள் தலைவர் அத்தகைய கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண் டும்.

(4) பேரவையின் பொதுக் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நேரிலோ அல்லது பதிலொருவர் (Proxy) மூலமாகவோ சமுகமாயிருக்கும் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) பேரவையின் கூட்டமொன்றுக்கு வருகைதரும் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் பேரவையால் தீர்மானிக்கக்கூடியவாறான கட்டணமொன்று அல்லது அத்தகைய கூட்டத்திற்கு வருகை தருகையில் உறப்பட்ட ஏதேனும் செலவை மீளளித்தல் வேண்டும்.

(6) பேரவையின் கூட்டங்களுக்கு தலைவர் தலைமை தாங்கவேண்டுமென்பதோடு, பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் தலைவர் இல்லாதவிடத்து, சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் ஒருவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(7) தலைவர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருப்பாராயின் பேரவை அவரது இடத்திற்கு பதிற் கடமை புரிவதற்காக உறுப்பினர்களின் ஒருவரை நியமிக்கலாம்.

(8) பேரவையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விடயத்தின் அல்லது கருமத்தின் மீது வாக்குகள் சரிசமமாக இருக்குமிடத்து அத்தகைய கூட்டத்தின் தலைவர் அவரது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(9) இதன்கண் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய பேரவையானது அதன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கான சொந்த நடவடிக்கை முறைகளைத் தீர்மானிக்கலாம்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகள்.

**11.** (அ) கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களாவதற்கான தேவைப்பாடுகள் :-

(1) இச்சட்டத்தின்கீழ் பேரவையினால் நடத்தப்பட்ட இறுதிப்பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும் ;

(2) ஆகக்குறைந்தது மூன்று வருடகாலத்திற்கான ஏற்புடைய பிரயோக அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(3) பிரயோக அனுபவம் பற்றிய திருப்திகரமான அறிக்கைகளைச் சமர்ப்பித்திருத்தல் வேண்டும் ;

(4) 21 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(5) தொழில்சார் ஒழுக்கநெறி பாகத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) எத்தன்மையதுமான பெயரினால் அழைக்கப்படுவதும் பேரவையின் அப்போதைக்கு ஆக்கப்பட்ட விதிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தொழில்சார் கணக்காளர் குழுமத்தின் உறுப்பினரொருவராக இருக்கும் ஆளொருவர்.

உறுப்பினர்களை வகுப்பாக்கம் செய்தல்.

**12.** (அ) நிறுவகத்தின் உறுப்பாண்மை சகபாடி உறுப்பினர்களையும் இணையுறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மாணவர் ஒருவர் நிறுவகத்தின் எல்லாப் பரீட்சைகளையும் பூர்த்திசெய்து பேரவையால் விதித்துரைக்கப்படக்கூடியவாறு அங்கீகரிக்கப்பட்ட துறையொன்றில் குறைந்தபட்சம் மூன்றாண்டு செயல்முறை அனுபவமொன்றைப் பெறுவதன் மீது பேரவைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு விதித்துரைக்கப்பட்ட கட்டணம் பேரவைக்கு விண்ணப்பம் செய்யப்படுவதன் மேல் நிறுவுகத்தின் இணையுறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் நிறுவகத்தின் இணையுறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவு செய்யப்படுவதன் மீது அவரது பெயரின் பின்னால் “CPA” என்ற சேர்ப்பினை பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(இ) தரம் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துறை அல்லது அதனையொத்த அனுபவத்துடன் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் ஒரு கணக்காளராக, முகாமைத்துறை ஆலோசகராக இருந்துள்ளார் என பேரவையைத் திருப்திப் படுத்துகின்றவரும் பேரவையால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றியுள்ளவருமான நிறுவகத்தின் உறுப் பினர் எவரும் நிறுவகத்தின் சகபாடி உறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும். பதிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடைய எவரேனும் ஆள், பதிவுசெய்யவென விண்ணப்பமொன்றை விதித் துரைக்கப்பட்ட கட்டணமொன்றுடன் சேர்த்துப் பேரவைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். உறுப்பினர் ஒருவர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவு செய்யப்படுவதன் மீது அவரது பெயரின் பின்னால் “CPA” என்ற சேர்ப்பினை பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ‘‘சான்றுபடுத்தப்பட்ட பகிரங்க கணக்காளர்’’ (CPA) எனும் தலைப்பை பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இல்லாத ஆளெவரும் ‘‘சான்றுபடுத்தப்பட்ட பகிரங்க கணக்காளர்’’ (CPA) எனும் தலைப்பை அல்லது மேலே (ஆ) மற்றும் (இ) உபபிரிவுகளில் குறிப்பிட்ட சேர்த்தல் எதையும் பயன்படுத்தல் ஆகாது.

*தலைப்புகள் மற்றும் சின்னத்தின் பாவனை.*

**13.** (1) எவரேனும் ஆள் 12(ஈ) உபபந்தியின்கீழ் தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி நிறுவகத்தின் பேரவையினால் எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்டாலன்றி, எந்தவொரு ஆளினாலும் விபரமாகவோ அல்லது சுருக்கமாகவோ ஏதேனும் பதவிப் பெயரை பெறுதல் அல்லது பாவித்தல் அல்லது நிறுவகத்தின் சின்னத்தை உபயோகித்தல் ஆகாது.

(2) முதலாவது உபபந்தியின் ஏற்பாடுகளை மீறும் ஆளெவரும் குற்றமொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

*பேரவையின் அதிகாரங்கள்.*

**14.** பேரவை, உகந்ததெனக் கருதின் நிறுவகத்தின் விதிகள், சட்டதிட்டங்கள் மற்றும் யாப்பின் ஏற்பாடுகளின்கீழ் வேறு வகையான உறுப்பினர் வகையை உருவாக்குவதற்கு நிறுவகம் அதிகாரம் கொண்டதாதல் வேண்டும்.

*எவரேனும் உறுப்பினர் ஒருவரின் வெற்றிடம் அல்லது நியமனத்தில் குறைபாடு உள்ளது என்பதால் நிறுவகத்தின் செயல்கள் அல்லது வழக்கு நடவடிக்கைகள் செல்லுபடி யற்றதாகக் கருதலாகாதென்பது.*

**15.** கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் வெற்றிடம் அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினர் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மட்டும் நிறுவகத்தின் செயல் அல்லது வழக்கு நடவடிக்கைகள் எவையும் செல்லுபடியற்றவை யாகக் கருதப்படுதலாகாது.

*மதியுரைச் சபையொன்றின் நியமனம்.*

**16.** (1) பத்துக்கு மேற்படாத மகிமைபெற்ற ஆட்களைக் கொண்ட மதியுரைச் சபையொன்றை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு நியமித்தல் பேரவைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். பேரவை அதன் தற்றுணிபின் பேரில் மதியுரைச் சபையின் கருத்துக்களையும் மதியுரையையும் நாடலாம். ஆனால் எவ்விதத்திலும் அத்தகைய மதியுரையை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அது பிணிக் கப்படல் ஆகாது.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நேர்முந்திய நாளன்று இருந்த "த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ்" மற்றும் அதன் மதியுரைச் சபையின் உறுப்பினர்கள் - பணிப்பாளர் சபை உறுப்பினர்களிலிருந்து ஐவர் இதன்மூலம் கூட்டிணைக்கப்படும் சபையின் முதலாவது நிறைவேற்றுச் சபையாதல் வேண்டுமென்பதுடன் அவர்கள் ஐந்து ஆண்டு காலத்திற்கு பதவி வகிக்கவும் இயலுமாதல் வேண்டும்.

நிறுவகத்தின் போஷகர்கள்.

**17.** பேரவையானது நிறுவகத்தின் போசகர்களாக சேவையாற்றுவதற்கு சிறப்புப் பெற்ற தொழிலாண்மை பின்னணியுள்ள உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆட்களைக் காலத்திற்குக் காலம் அழைக்கலாம். அவர்கள் எவையேனும் பிரவேசக் கட்டணங்களை அல்லது ஆண்டு ஒப்பப்பணங்களைச் செலுத்துமாறு தேவைப் படுத்தப்படல் ஆகாது.

பேரவை உறுப்பினர்களின் வேதனங்கள்.

**18.** பேரவையின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது எவரேனும் உறுப்பினர்களுக்கும் நிறுவகத்தின் நிதியங்களில் இருந்து பேரவையால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேதனம் செலுத்தப்படலாம்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**19.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் பேரவை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) நிறுவகத்திற்குச் சொந்தமான எல்லாப் பணங்களும் இலங்கை அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது பிணையங்களில் முதலீடு செய்யப்படல் வேண்டும்.

**20.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சான்றுப்படுத்தப்பட்ட பகிரங்க கணக்காளர் நிறுவகத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*நிறுவகத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் நிறுவகத்திற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.*

**21.** (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*நிறுவகத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) நிறுவகமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், செலவினங்களும் சொத்துக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது,-

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிழை வைத்திருப்பவருமாகிய ஆளொருவர் ; அல்லது

(ii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழைக் கொண்டிருக்கின்றவர்களுமான பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

நிறுவகத்தின் ஒப்பந்தங்கள்.

**22.** (1) கூட்டுத்தாபனத்தின் சார்பிலான ஏதேனும் ஒப்பந்தம் பின்வருமாறு செய்யப்படலாம் :-

(அ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டு எழுத்து மூலம் இருத்தல் வேண்டுமென சட்டத்தால் தேவைப் படுத்தப்படின் கூட்டுத்தாபனத்தின் பொது இலச்சினையின்கீழ் எழுத்தில் செய்யப்படலாம் ;

(ஆ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டு எழுத்து மூலம் இருத்தல் வேண்டுமென சட்டத்தால் தேவைப் படுத்தப்படின் அதற்கென கூட்டுத்தாபனத்தால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளி னால் அல்லது ஆட்களினால் கூட்டுத்தாபனத்தின் சார்பில் செய்யப்படலாம் ;

(இ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டு எழுத்து மூலமன்றி வாய்மொழியாக செய்யப்பட்ட போதிலும் சட்டத்தால் செல்லுபடியானால் அதற்கென கூட்டுத் தாபனத்தால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் கூட்டுத்தாபனத்தின் சார்பில் வாய்மொழியாகச் செய்யப்படலாம்.

(2) இப்பிரிவிற்கிணங்க செய்யப்பட்ட ஒப்பநதமொன்று சட்டத்தில் பயனுறுதல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாப னத்தையும் அதற்கான எல்லா ஆட்களையும் அவர்களது சட்டப் பிரதிநிதிகளையும் பிணித்தல் வேண்டும்.

கணக்காளராக தொழிலில் ஈடுபடுவதில் கட்டுப்பாடுகள்.

**23.** (1) நிறுவகத்தின் உறுப்பினராகிய ஆளொருவர் அல்லது கணக்காளர் கம்பெனியொன்றின் பங்காளரொருவர் கணக்காளர் ஒருவராக பணியில் ஈடுபடுதல் அப்போதைக்கு வலுவிலுள்ள செல்லுபடியான சான்றிதழ் இல்லையேல் அவருக்கு கணக் காளரொருவராக தொழிலில் ஈடுபட இயலாது.

(2) உறுப்பினர், இணைந்த உறுப்பினர் மற்றும் ஏதேனும் கணக்காளர் கம்பெனியின் பங்காளர் உரிய கட்டணங்களைச் செலுத்திய பின்னர் பேரவையினால் தொழிலில் ஈடுபடுவதற்கு சான்றிதழ் வழங்கப்படும்.

(3) தொழிலில் ஈடுபடுவதற்கு வழங்கப்பட்ட சகல சான்றிதழ்களும் அது வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 வரை செல்லுபடியாகும் என்பதுடன், உபபந்தி (2) இல் தீர்மனிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திய பின்னர் அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ள முடியும்.

(4) கணக்காளர் கம்பெனியொன்றின் ஒவ்வொரு பங்காளரும் தொழிலில் ஈடுபடுவதற்கு சான்றிதழ் வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் கணக்காளராக தொழிலில் ஈடுபடுவதற்கு அச் சான்றிதழ் கம்பெனியால் அங்கீகரித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

*இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட செயல்கள் அல்லது நிறுவகத்தின் பணிப்பு களுக்கான பாதுகாப்பு.*

**24.** (1) குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் –

(அ) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தினால் நன்நோக்குடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்பட்ட எச்செயலுக்காகவும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது விடயத்திற்கேற்றாற்போல் பேரவையின் பணிப்புகளின் மீது அத்தகைய உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவரினால் நன்நோக்குடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட செயலுக்காக எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக,

தொடுக்கப்படல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் உட்பிரிவு (1) (ஆ) இல் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்புரைகளின் மீது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக உறப்பட்ட ஏதேனும் செலவினம் அத்தகைய செயல் நன்னோக்குடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்திருப்பின் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர் ஒருவரின் ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

**25.** கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் உறுப்பினர் ஒருவரின் ஆளுக்கு அல்லது ஆதனத்திற் கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

தவறுகளும் தண்டங்களும்.

**26.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வோ ராளும் நீதிவானொருவர் முன்னிலையில் விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு மறியற்றண்டனை அல்லது ஐந்நூறு ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

கணக்காளராகத் தொழில்புரிய உள்ள வரையறைகள்.

**27.** (1) இச்சட்டத்தின் கருமங்களுக்காக எவரேனும் ஆள் கணக்காளராக தொழிலில் ஈடுபடுவதாகக் கருதுவது அவரால் அல்லது பங்காளரொருவராக அல்லது அவருக்கு கிடைக்கப் பெறும்படிக் கொடுப்பனவு அல்லது கிடைக்க வேண்டிய படிக் கொடுப்பனவைக் கருத்திற் கொண்டு அவர் –

(அ) கணக்காளராக சேவையில் ஈடுபடுதல் அல்லது கணக்காளரொருவராக பிரபல்யமடைதல் ; அல்லது

(ஆ) அவர் பணக் கொடுக்கல்வாங்கல், கணக்குப் புத்தகங்கள் அல்லது கணக்கு அறிக்கை கணக்காய்வு செய்தல், சரி பிழை பார்த்தல் போன்ற பணிகளில் ஈடுபடல் அல்லது அவ்வாறு சேவையில் ஈடுபடுவதற்கு முன்வருதல் அல்லது நிதி ரீதியான கணக்கீடு மற்றும் அது சார்ந்த கூற்றுக்களை தயாரித்தல், சரி பிழை பார்த்தல் அல்லது அத்தாட்சிப்படுத்துகையில் ஈடுபடல் ; அல்லது

(இ) கணக்கீடு செயற்கோட்பாடுகள், கொள்கைரீதியான விடயங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் தரவுகளைச் சான்றுபடுத்தல் தொடர்பான தொழிலாண்மையாளர் அல்லது உதவியாளரை வழங்குதல் ; அல்லது

(ஈ) கணக்காளர் ஒருவராக தொழிலில் ஈடுபடுவதற்காக பேரவையால் சட்டதிட்டங்கள் மூலம் வெளியிடக் கூடிய வேறு சேவைகளை வழங்குவதில் ஈடுபடுதலும் உள்ளடங்கும்.

(2) எவரேனும் ஓராள் அரசினால் அல்லது வேறு சேவை வழங்குநரின் சம்பளத்தைப் பெறும் ஊழியராக அவருடைய ஆற்றலின் பேரில் மேலே உபபந்தி (1) இல் குறிப்பிடப்பட்ட கருமத்தில் ஈடுபடுவதனால் மாத்திரமே கணக்காளராக தொழிலில் ஈடுபடுவதாக கருத வேண்டியதில்லை.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**28.** நிறுவகத்தின் இலச்சினை, நிறுவகத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தானது மான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**29.** நிறுவகம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருப்பின் அத்தகைய சொத்து நிறுவகத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. எனினும் அது நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவகம் அல்லது நிறுவகங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவகத்தின் அல்லது அந்நிறுவகங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிக்கப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படல் வேண்டும். நிறுவகம் கலைக்கப்படுகின்ற வேளையிலோ அதற்கு முன்னராகவோ நிறுவகத்தின் அங்கத்தவர்களால் அதற்கு முன்னராகவோ நிறுவகத்தின் அங்கத்தவர்களால் அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவகங்கள் பற்றித் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**30.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**31.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்